


PTN news
# தினப்புயல்
THINAPPUYAL
තිනප්පුයල්
REGISTERED AS A NEWS PAPER AT THE DEP. of . N.A :- RBN/4/3/06




மலர்-02 Tel&Fax:- 0242227558, Hot line: 0711850885. Email:thinappuyal2014@gmail.com, www.thinappuyalnews.com இதழ் - 30

## இன்றும் தொடர்கிறது ஆசிரியர், அதிபர்களின் போராட்டம்



தங்களுடைய தொழிற்சங்க நடவடிக்கையை எவ்விதத்திலும் நிறுத்தப் போவதில்லை என ஆசிரியர் சங்கப் பிரதிநிதிகள் தெரிவித்துள்ளனர்.

அதனடிப்படையில், ஆசிரியர் தினத்தை முன்னிட்டு இன்று (06) நாடளாவிய ரீதியில் போராட்டங்கள் நடத்த எதிர்ப்பார்ப்பதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

அரசாங்கம் தற்போது பாடசாலைகளை ஆரம்பிக்க தயாராகி வருகின்ற போதிலும் தாங்கள் கற்பிக்கத் தயாராக இல்லை எனவும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

## இந்தியாவுக்கு எதிரான செயல்களுக்கு இலங்கை பயன்படுத்தப்படமாட்டாது - ஜனாதிபதி



இந்தியாவின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக இருக்கும் எந்தவொரு செயலுக்கும் இலங்கை பயன்படுத்தப்படுவதற்கு அனுமதிக்கமாட்டோம் என்று ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ உறுதிபடத் தெரிவித்தார்.

இந்திய வெளியுறவுத் துறைச் செயலர் ஷ்ரிங்லா, 4 நாள் பயணமாக இலங்கை சென்றி ருந்தார். ஜனாதிபதி கோட்டபாயவை அவர் செவ்வாய்க்கிழமை சந்தித் துப் பேசினார். பல்வேறு விவகாரங்கள் குறித்து இருவரும் விவாதித்தனர்.

இந்தச் சந்திப்புக்குப் பிறகு ஜனாதிபதி அலுவலகம் வெளியிட்ட செய்திக் குறிப்பில் கூறப்பட்டிருப்பதாவது, சுற்றுலா, மின்னுற்பத்தி, கொரோனா பெருந்தொற்றுக்குப் பிறகு பொருளாதாரத்தை வலுப்படுத்துவது உள்ளிட்ட விவகாரங்கள் குறித்து இருவரும் விவாதித்தோம். (03)

## சிறிதரனின் உரைக்கு பாராளுமன்றத்தில் எதிர்ப்பு

இலங்கை அரசால் சிறுவர்கள் பலர் படுகொலை செய்யப்பட்டதாக தெரிவித்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரனின் உரைக்கு அரசாங்க தரப்பினரால் பாராளுமன்றத்தில் எதிர்ப்பு வெளியிடப்பட்டது.

பாராளுமன்றத்தில் வரிச்சட்டங்கள் தொடர்பிலே விவாதங்கள் இடம்பெற்ற பொழுது தமிழ் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன் உரை யாற்றியிருந்தார்.

விடுதலைப் புலிகள் அமைப்பின் தலைவர் பிரபாகரனின் இளையமகன் பாலச்சந்திரன் படுகொலை, நவாலிப் படுகொலை, செம்மணி படுகொலை, செஞ்சோலைப் படுகொலை என பட்டியலிட்டு உரையாற்றிய போதே அவரது உரைக்கு எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டதுடன் அவர் உரையாற்றிய போது இடை இடையே குழப்பங்கள் ஏற்படுத்தப்பட்டதுடன் தொடர்ந்தும் உரையாற்ற வாய்ப்பு மறுக்கப்பட்டது. (03)



## கொரோனா காலத்தில் குழந்தைகளின் மன ஆரோக்கியம் பாதிப்பு

குழந்தைகளின் மன நிலையில் கொரோனா நோய்த்தொற்று குறிப்பிடத்தக்க தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளதாக "யுனிசெப்' நிறுவனம் தனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளதாக மத்திய சுகாதாரம், குடும்ப நலன், ரசாயன, உரத்துறை அமைச்சர் மன்சுக் மாண்டவியா தெரிவித்தார். (03)

## இந்தியாவுக்கு எதிரான...

*இந்தியாவின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக இருக்கும் எந்தவொரு செயலுக்கும் இலங்கை பயன்படுத்தப்படுவதற்கு அனுமதிக்க மாட்டோம். விரிவான புரிதலின் அடிப்படையில் சீனாவுடன் இலங்கை நட்புறவைத் தொடர்கிறது. எனவே, அந்த நட்புறவு குறித்து சந்தேகம் கொள்ள வேண்டாம் என்று ஷ்ரிங்லாவிடம் கோட்டாபய ராஜபக்ஷ கூறினார்.*

*இலங்கையில் முதலீடு செய்ய இந்திய முதலீட்டாளர்கள் முன்வர வேண்டும். திருகோணமலையில் உள்ள எண்ணெய் சேமிப்புக் கிடங்குகளை இந்திய நிறுவனம் குத்தகைக்கு நடத்தி வருகிறது. இதற்கு இலங்கை தொழிற் சங்கங்கள் எதிர்ப்பு தெரிவித்து வருகின்றன. இதில், இரு நாடுகளுக்கும் பலன் கிடைக்கும் வகையில் சுமுகத் தீர்வு எட்டப்படும்.*

**தமிழர்களுக்கு அதிகாரப் பகிர்வு**

*இலங்கையில் தமிழர்களுக்கு அதிகாரப் பகிர்வு அளிக்கும் அரசமைப்புச் சட்டத்தின் 13-ஏ பிரிவை அமல்படுத்த வேண்டும் என்று இந்தியா நீண்ட காலமாக வலியுறுத்தி வருகிறது. அந்தச் சட்டத்தில் உள்ள பலம் மற்றும் பலவீனத்தை புரிந்துகொள்ள வேண்டியது உடனடித் தேவையாக உள்ளது.*

*இந்தியா, இலங்கை இடையே 1960 மற்றும் 1970களில் நிலவிய நட் புறவை மீண்டும் நிறுவ வேண்டியது அவசியம். இரு நாட்டு மீனவர்களுக்கு இடையே நீண்ட காலமாக பிரச்சினை நீடிக்கிறது. தற்போதைய பிரச்சினைகளுக்கு உடனடி தீர்வு காண்பதன் மூலம் நீண்ட கால பிரச்சினைக்கு தீர்வு கண்டடைந்துவிடலாம் என்று ஷ்ரிங்லாவிடம் கோட்டபாய ராஜபக்ஷ விடம் கூறினார் என்று அந்த செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.*

*இலங்கையில் துறைமுகங்கள் உட்பட பல்வேறு உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்த சீனா பல கோடி டொலர் கடனுதவி அளித்துள்ளது. கொரோனா பெருந்தொற்றுக்குப் பிறகு பொருளாதார மீட்பு நடவடிக்கைகளுக்கும் இலங்கைக்கு சீனா உதவி செய்துள்ளது. இதனால், இலங்கையைப் பயன்படுத்தி இந்தியாவுக்கு எதிரான செயல்களில் சீனா ஈடுபடக்கூடும் என்ற சந்தேகம் எழுந்துள்ளது. அதை தெளிவுபடுத்தும் விதமாக இலங்கை ஜனாதிபதி கோட்டபாய ராஜபக்ஷ உறுதியளித்துள்ளார்.*

*முன்னதாக இலங்கைப் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவையும் அந்நாட்டிலுள்ள தமிழர் கட்சிகளின் தலைவர்களையும் ஷ்ரிங்லா திங்கட் கிழமை சந்தித்தமை குறிப்பிடத்தக்கது.*

*(தினமணி)*

## கொரோனா காலத்தில்...

“குழந்தைகளின் மன ஆரோக்கியம் மேம்படுத்துதல், பாதுகாத்தல், அக்கறை கொள்ளுதல் எனும் 2021ஆம் ஆண்டு உலக குழந்தைகள் நிலை குறித்த யுனிசெப்பின் உலகளாவிய முதல் பதிப்பை மத்திய அமைச்சர் மன்சுக் மாண்டவியா செவ்வாய்க் கிழமை வெளியிட்டுப் பேசியதாவது, முழுமையான ஆரோக்கியம், நல்வாழ்வை நமது பாரம்பரிய மருத்துவமுறைகள் வழங்கினா லும், இந்தியா போன்ற வளரும் நாடுகளில் மனநலப் பிரச்சினைகள் அதிகரித்து வருவது சிக்கல் நிறைந்தது. விவசாயப் பின்னணியைக் கொண்ட கிராமப்புற கூட்டுக் குடும்ப அமைப்புகளில் உள்ள குழந்தைகளுக்கும், இளம் வயதினருக்கும் அதிக அளவில் பிற குடும்ப உறுப்பினர்களுடன் உரையாடும் வாய்ப்பு கிடைக்கிறது. இந்தச் சூழ்நிலையில் மனநலம் பாதிக்கப்பட்டாலும் மாற்று வழி கிடைக்கும். சில சமயங்களில் பெற்றோர்களிடம் அணுக முடியாத நிலையிலும் கூட மற்ற உறுப்பி னர்களிடம் இருந்து இந்தக் கூட்டுக் குடும்ப நிலையில் வழிகாட்டுதல்கள் கிடைக்கின்றன. தனிக் குடித்தனங்களின் காரணமாக தனிமையுணர்வு அதிகரித்து மனநல பாதிப்பு அதிகரித்து வருகிறது.

குழந்தைகளின் மன நலனில் கொவிட்-19 நோய்த் தொற்று குறிப்பிடத்தக்க தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளதாக யுனிசெப்பின் அறிக்கையில் விவரிக்கப்பட்டுள்ளது. கொரோனா நோய்த்தொற்று ஒட்டுமொத்த சமுதாயத்துக்கும் மன அழுத்தத்தை ஏற்படுத்தியது. குறிப்பாக இரண்டாவது அலை இந்த அனுபவத்தை நமக்கு வழங்கியது. இதற்குத் தேவையான மருந்துகளின் உற்பத்தி திறன் அதிகரிக்கப்பட்டு, புதிய அலைகளை நிறுவுவதற்கான செயல்முறை துரிதப்படுத் தப்படும்.

மனநலப் பிரச்சினைகளுக்கு பெற்றோர்கள், குடும்பத்தினர் ஆகியோருடன் ஆசிரியர்கள் மிக முக்கியப் பங்கு வகிக்கின்றனர். குடும்பத்தினரும் ஆசிரியர்களும் பரஸ்பர நம்பிக்கையுடன் குழந்தைகளுக்கு வெளிப்படையான ஆலோசனை களை வழங்க வேண்டும். தேர்வுகளில் மன அழுத்தத்துக்குள்ளாகும் குழந்தைகளுக்கு “பரீக்ஷ பே சார்ச்சா” நிகழ்ச்சிகளை பிரதமர் நடத்தினார். பிரச்சினையை பரந்த அளவில் எதிர்கொள்வதற்கு அரசின் அர்ப்பணிப்பாக பிரதமர் இதை மேற்கொண்டார் என்றார் மன்சுக் மாண்டவியா.

இந்த நிகழ்ச்சியில் பேசிய யுனிசெஃப் அமைப்பின் இந்திய பிரதிநிதி டொக்டர் யாஸ்மின் அலி ஹக், அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள சில விஷயங்களை முன்வைத்தார். இந்தியாவில் 15 முதல் 24 வயதுக்குட்பட்டவர்களில் 14 சதவீதம் அல்லது 7 பேர்களில் ஒருவர் அடிக்கடி மனச் சோர்வடைகிறார்கள். அல்லது தங்கள் விஷயங்களில் சிறிதும் ஆர்வம் காட்டாது உள்ளனர் என்று அறிக்கை கூறுகிறது. “குழந்தைகள் சோகத்தில் வாழ்வது மட்டுமல்ல, புறக்கணிக்கப்படும் மற்றும் துஷ்பிரயோகம் செய்யப்படும் ஆபத்தில் உள்ளனர் எனவும் அவர் குறிப்பிட்டார்.

## சிறிதரனின் உரைக்கு...

அவரது உரையில், “கடந்த வெள்ளிக்கிழமை, ஒக்ரோபர் 01ஆம் திகதி சர்வதேச சிறுவர் தினமான அன்றைய நாள், இலங்கை அரசால் கோரமாகப் படுகொலை செய்யப்பட்ட, விடுதலைப்புலிகள் அமைப்பின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் அவர்களின் இளையமகன் பாலச்சந்திரன் அவர்களது 25 ஆவது அகவை நாளாகும். முள்ளிவாய்க்கால் மண்ணில் கொத்துக் கொத்தாகத் தமிழர்களைக் கொன்றொழித்த இனவாத அரசின் கோரமுகத்தை இந்த உலகுக்கு எண்பித்த ஆகப்பெரும் போர்க்குற்றச் சாட்சியமாய் இசைப்பிரியாவின் இறுதிக் கணங்களும், பாலச்சந்திரனின் படுகொலையும் அமைந்திருந்தது.

சுற்றிவர மண் மூட்டைகளால் சூழப்பட்ட ஓர் மரப்பலகையில், கையில் ஒரு பிஸ்கட் பக்கற்றும், கையருகே ஓர் நீர்க்குவளையுமாக, எந்தச் சலனமுமற்று எதையோ வெறித்துப் பார்த்தபடி அமர்ந்திருந்த பன்னிரு வயதுப் பாலகன் பாலச்சந்திரனின் புகைப்படத்தையும், அதே பாலச்சந்திரன் மேலாடையற்ற மார்பில் ஐந்து துப்பாக்கிச் சன்னங்கள் துளைத்த அடையாளத்தோடு, உயிர்பிரிந்த நிலையில் தரையில்க் கிடந்த புகைப்படத்தையும் சனல் 4 தொலைக்காட்சி வெளியிட்ட அந்தக் கணங்கள், உலகப் பரப்பெங்கும் வாழும் இதயமுள்ள ஒவ்வொரு மனிதர்களையும் இனம், மொழி, மதம் கடந்து இரத்தக் கண்ணீர் வடிக்கச் செய்திருந்தது.

தமிழீழத் தேசியத் தலைவராக, தமிழர்கள் தம் நெஞ்சில் வைத்துப் பூசித்த வேலுப்பிள்ளை பிரபாகரனின் இளையமகன் என்ற ஒற்றைக் காரணமே, பன்னிரண்டு வயதுப் பாலகனான பாலச்சந்திரனை கோரமாகப் படுகொலை செய்த இந்த இனவெறி அரசின் உயிர்ப்பலிப் பசிக்குப் போதுமானதாக இருந்தது. காலம்காலமாக ஆட்சிக்குவந்த அத்தனை சிங்கள அதிகார பீடங்களும் தமிழர்கள் மீதான அதிகபட்ச அதிகார வன்முறைகளை கட்டவிழ்த்துவிட்டிருந்தாலும், தற்போதைய ஜனாதிபதி கோட்டபாய ராஜபக்ஷ பாதுகாப்புச் செயலராகவும், தற்போதைய பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ ஜனாதிபதியாகவும் இருந்த அப்போதைய ஆட்சிக் காலத்தில், முள்ளிவாய்க்கால் மண்ணில் வைத்து ஈழத் தமிழர்கள் மீது இரக்கமற்று நடத்தப்பட்ட இன அழிப்பிற்கு ஏற்றுக்கொள்ளத்தக்க சாட்சியங்களுள் ஒன்றாய் அமைந்த பாலச்சந்திரனின் சாவு, ஒட்டுமொத்த தமிழர்களின் இதய ஓரங்களிலும் இன்னமும் ரணமாய் வலித்துக் கொண்டே தான் இருக்கிறது.

1990 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 20 ஆம் திகதி, ஐக்கிய நாடுகள் சபையால் கொண்டுவரப்பட்ட சிறுவர் உரிமைகள் தொடர்பிலான பிரகடனத்தை ஏற்று, 1991 ஆம் ஆண்டு இலங்கை அதில் கைச்சாத்திட்டுள்ளபோதும், இந்த நாட்டில் தமிழ்ச் சிறுவர்களுக்கான அடிப்படை உரிமைகள் என்ற சொற்பிரயோகத்துக்கு எந்த அவசியமுமற்று, அவர்களுக்கான உயிர்வாழும் உரிமை கூட பௌத்த சிங்கள பேரினவாதிகளால் வலிந்து பறிக்கப்பட்டு வருவதை இவ்விடத்திலே நான் பதிவு செய்ய விரும்புகிறேன்.

இறுதிப்போரின் போது கொல்லப்பட்ட எண்ணக்கணக்கற்ற சிறுவர்கள், ஆவணப்படுத்தப்படாத படுகொலைச் சம்பவங்கள், கணக்கிடப்படாத இழப்புக்களைக் கொண்ட படுகொலைகள் நீங்கலாக 1974 ஜனவரி 10 தமிழ் ஆராய்ச்சி மாநாட்டுப் படுகொலை முதல் 2008 டிசம்பர் 20 வட்டக்கச்சி குண்டுவெடிப்பு வரையான, ஆவணப்படுத்தப்பட்ட 95 படுகொலைச் சம்பவங்களில் மட்டும் கைக் குழந்தைகள் தொடக்கம் 18 வயது வரையான 1929இற்கும் அதிகமான சிறுவர்கள் உயிரிழந்துள்ளதாக வடக்கு, கிழக்கு மனித உரிமைகள் செயலகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இவற்றுள் மிக முக்கியமாக நவாலிப் படுகொலை உள்ளிட்ட, அரச படைகளால் திட்டமிட்டு மேற்கொள்ளப்பட்ட கொலை வெறித் தாக்குதல் சம்பவங்களைக் குறிப்பிடலாம். 1995 ஜீலை 9, பலாலி மற்றும் அளவெட்டிப் பகுதிகளில் இராணுவத்தினரால் மேற்கொள்ளப்பட்ட திடீர்த் தாக்குதல்களால் நிலைகுலைந்து, உடுத்த உடைகளுடன் உயிரைக் கையில் பிடித்தபடி, நவாலி சென். பீற்றர்ஸ் தேவாலயத்தில் தஞ்சமடைந்திருந்த குழந்தைகள், சிறுவர்கள், பெண்கள், வயோதிபர்கள் உள்ளிட்ட ஆயிரக்கணக்கான அப்பாவிப் பொதுமக்கள் மீது புக்காரா விமானங்கள் ஈவிரக்கமின்றி வீசிச் சென்ற 13 குண்டுகளால், 147 பேர் கொல்லப்பட்டதோடு, 360 இற்கும் மேற்பட்டவர்கள் படுகாயமடைந்திருந்தனர். இதன்போது கொல்லப்பட்டவர்களுள் 46 சிறுவர்களும் உள்ளடங்குகின்றனர்.

1995 செம்ரெம்பர் 22 யாழ்ப்பாணம், வடமராட்சி கிழக்கு நாகர்கோவில் மகா வித்தியாலயம் மீது இலங்கை விமானப்படை மேற்கொண்ட குண்டுவீச்சுத் தாக்குதலில் 6 தொடக்கம் 16 வயதுக்குட்பட்ட 21 மாணவர்கள் உடல் சிதறிப் பலியாகியிருந்தார்கள். 1996 செப்ரெம்பர் 7 ஆம் திகதி, யாழ். சுண்டுக்குழி மகளிர் கல்லூரி மாணவியான கிருஷாந்தி குமாரசாமி அவர்கள், செம்மணி இராணுவ முகாமைச் சேர்ந்த இராணுவத்தினரால் பாலியல் வன்புணர்வுக்கு உள்ளாக்கப்பட்டு படுகொலை செய்யப்பட்டதோடு, அவரைத் தேடிச்சென்ற தாயார் திருமதி. இராசம்மா குமாரசாமி, அயலவர் திரு.கிருபாமூர்த்தி, சகோதரன் குமாரசாமி பிரணவன் ஆகியோரையும் இராணுவத்தினர் படுகொலை செய்து செம்மணி வயல்வெளியில் புதைத்திருந்தனர்.

அக்காலப்பகுதியில் இராணுவத்தினரால் கடத்தப்பட்ட, காணாமலாக்கப்பட்ட 600 இற்கும் அதிகமான யாழ்ப்பாண மாவட்டத்தைச் சேர்ந்த இளைஞர், யுவதிகள் அதே செம்மணி வயல் வெளியில் புதைக்கப்பட்டமையும் இந்த நாட்டில் நடைபெற்ற படுகொலைகளுக்கான சாட்சியங்களே!. 2006 ஓகஸ்ட் 14, முல்லைத்தீவு, வள்ளிபுனத்தில் சிறுவர் இல்லம், நலன்புரி நிலையம், குடியிருப்புக்கள் என்பன அமைந்திருந்த பகுதியில், அதிலும் குறிப்பாக அநாதரவான குழந்தைகளின் காப்பகமான செஞ்சோலைச் சிறுவர் இல்லத்தை இலக்குவைத்து, மிகப் பயங்கரமாக 16 தடவைகள் மேற்கொள்ளப்பட்ட விமானக் குண்டுவீச்சில் பாடசாலை மாணவிகள், செஞ்சோலைச் சிறுவர் இல்லச் சிறுமிகள் உள்ளிட்ட 17 - 19 வயதிற்கு இடைப்பட்ட 61 பேர் கோரமாகப் படுகொலை செய்யப்பட்டிருந்ததோடு, 120 இற்கும் அதிகமானோர் படுகாயம் அடைந்திருந்தனர். 2007 கார்த்திகை 27, தமிழ்த் தேசிய மாவீரர் தினமான அன்றைய தினம் முல்லைத்தீவு மாவட்டத்தின் ஐயங்கன்குளம் பகுதியில் திட்டமிட்டு மேற்கொள்ளப்பட்ட கிளைமோர் தாக்குதலில் ஆறு மாணவர்கள் கொல்லப்பட்டிருந்தனர்.

குழந்தைகள், சிறுவர்கள் என்ற எந்த பேதமுமற்று, அடிப்படை மனிதநேயச் சிந்தனைகூட இல்லாது, சர்வதேச நியமங்கள் அனைத்தையும் மீறி, தமிழர்கள் என்ற இனவெறிச் சிந்தனையின் வெளிப்பாட்டால், பௌத்த, சிங்கள பேரினவாதத்தால் படுகொலை செய்யப்பட்ட பாலச்சந்திரன் உள்ளிட்ட அத்தனை சிறுவர்களையும் நான் இந்த இடத்தில் நினைவுகூருகிறேன்.” என தெரிவித்து உரையாற்றிய பொழுது தொடர்ந்தும் உரையாற்ற வாய்ப்பு மறுக்கப்பட்டது.

-யாழ். நிருபர் பிரதீபன்-